ஒ.வெ.எண்:. 25 நாள்: 10.1.2017

பூம்புகார்
Poompuhar
Hand in hand with our artisans...

தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம்
759, அண்ணா சாலை, சென்னை – 600 002

# பத்திரிகை குறிப்பு

## கைவினைஞர்கள் மற்றும் அவர்களின் திறனுக்கான மின் தொகுப்பு (e-Repository of Artisans and their Skills)

தமிழகத்திலுள்ள அனைத்து கைவினைஞர்களைப்பற்றியும் அவர்களது திறமைகள் தொடர்பான அனைத்து தகவல்களையும் சேகரித்து அவர்களுக்கென இணையதள உருவாக்க தமிழக அரசு தமிழ்நாடு புதுமை முயற்சிகள் திட்டம் (Tamil Nadu Innovations Initiatives) 2015–16 ஆம் ஆண்டின் கீழ் இந்நிறுவனத்திற்கு ஆணை வழங்கியுள்ளது.

இவ் இணையதளத்தில் தமிழகத்திலுள்ள அனைத்து கைத்திறன் கைவினைஞர்கள் ஒவ்வொருவருக்கும் தனித்தனிப் பக்கங்கள் (individual web page) உருவாக்கப்படவுள்ளது. இதில் கைவினைஞர் மற்றும் அவர்களது திறமைகள் பற்றிய அனைத்து தகவல்களும் சேகரிக்கப்படும். இதன் மூலம் கைவினைஞர்கள் பற்றிய அனைத்து விபரங்களும் அரசின் கவனத்திற்கு வருவதுடன் சமூக வலைதளங்கள் மூலம் உலகளாவிய சந்தையினை சென்றடைய வழிவகை செய்யப்படும்.

தமிழகத்திலுள்ள அனைத்து கைத்திறன் கைவினைஞர்களும் இந்த அரிய வாய்ப்பினை பயன்படுத்தி, இந்நிறுவனத்தின் சார்பில் கணக்கெடுக்க வரும் அதிகாரிகளிடம் கைவினைஞர் மற்றும் அவர்களது திறமை பற்றிய அனைத்து விவரங்களையும் தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இது தொடர்பாக உரிய படிவத்தினை இந்நிறுவனத்தின் http://www.tnhdcltd.com லிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 759, அண்ணா சாலை, சென்னை – 600 002 என்ற முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கலாம்.

ஒப்பம்/–
தலைவர் மற்றும் மேலாண் இயக்குநர்